செ. கு. எண்: 072 நாள்: 08.05.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 8.5.2018

ஜம்மு-காஷ்மீர் மாநிலம், புட்காம் மாவட்டம், குல்மார்க் என்ற இடத்திற்கு சுற்றுலா சென்ற பேருந்து மீது போராட்டக்காரர்கள் கற்கள் வீசியதில், பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், பழவேடு, கரிமேடுவைச் சேர்ந்த திரு. ராஜவேலு என்பவரின் மகன் திரு. திருமணிசெல்வம் என்பவர் கல்வீச்சு தாக்குதலில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. திருமணிசெல்வம் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் செய்தியை அறிந்தவுடன், உயிரிழந்த திரு. திருமணிசெல்வம் அவர்களின் உடலை சென்னைக்குக் கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாக செய்ய அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். அதன் பேரில், புதுடில்லிலுள்ள தமிழ்நாடு இல்ல உயர் அதிகாரிகள் இறந்தவரின் உடலை சென்னை கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஜம்மு காஷ்மீர் மாநில அரசின் உதவியுடன் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து சுமார் 130 நபர்கள் சுற்றுலா சென்றுள்ளதாக தெரிய வருகிறது. இவர்கள் அனைவரும் பாதுகாப்பாக சென்னை திரும்புவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு புதுடில்லியிலுள்ள தமிழ் நாடு இல்ல அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜம்மு-காஷ்மீருக்கு சுற்றுலா சென்றவர்கள் பாதுகாப்பாக தமிழ்நாடு திரும்ப தேவையான உதவிகளை பெற புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்ல அதிகாரிகளின் தொலைபேசி எண் 011-24193450, 011-24193100 மற்றும் 011-24193200 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், **இந்த செய்தி குறித்து அறிந்தவுடன், ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் செல்வி மெஹபூபா முப்தி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டிலிருந்து ஜம்மு-காஷ்மீருக்கு சுற்றுலா சென்றவர்கள் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு திரும்பி வருவதற்கு தேவையான உதவிகளை தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கு செய்யுமாறு நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.**

மேலும், வருங்காலங்களில் தமிழ்நாட்டில் இருந்து பிற இடங்களுக்கு சுற்றுலா செல்லும் பயணிகள் தங்கள் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்து கொண்டு, தங்கள் பயணத்தை திட்டமிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில், உயிரிழந்த திரு. திருமணிசெல்வம் அவர்கள் இறந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **மூன்று லட்சம் ரூபாய்** இறந்தவரின் குடும்பத்திற்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**\வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**